Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 81/2020**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோதி பகவதி | ஜாதி | : | |
| க/பெ | : | பாலசுப்பிரமணி | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | பழைய செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 31 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பழைய செம்பட்டியில் குடியிந்துகொண்டு வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 05.06.2020 அன்று இரவு 10.45 மணியைபோல பால் வியாபாரம் செய்துவிட்டு என் கணவர் பாலசுப்பிரமணி திண்டுக்கல்லில் இருந்து செம்பட்டிக்கு வந்துகொண்டிருநத்போது ஆத்துப்பட்டி பிரிவு என்ற இடத்தில் அவருக்கு முன்னால் ரோட்டில் விளக்கு எதுவும் இல்லாமல் நின்றுகொண்டிருந்தது லாரி மீது என் கணவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனம் மோதி அவருக்கு தலையிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டது. சம்பவத்தின் போது என் கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். உள்காயம் இருந்ததால் வயிற்றில் இரத்த கசிவு ஏற்பட்டு அதன் விளைவாக என் கணவர் இறந்துவிட்டார். என் கணவர் இரவு நேரம் ஆகியும் வராததால் அவருக்கு போன் செய்தேன். அப்போது என் கணவரின் போன் எடுத்து சம்பவ இடத்தில் இருந்த ஒருவர் என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக கூறியதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கிருந்து மேல்சிகிக்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார். மீண்டும் நாங்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கே வந்துவிட்டோம். மறுநாள் காலையில் செம்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தோம். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதி கொரோனா காலம் என்றால் சரிதான். கொரோனா காலத்தில் போக்குவரத்து அதிகம் இல்லை என்றும், ஒரு சில வாகனங்கள் தான் Epass அடிப்படையில் இயங்கி வந்தது என்றால் சரிதான். அதனால் ரோட்டில்

போக்குவரத்து அவ்வளவாக இல்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள விபரம் அனைத்தும் போலிசார் சொல்லி தான் சொன்னீர்கள் என்றால் சரியல்ல, அந்த இடத்தில் இருந்த நபர்கள் சொன்னார்கள். சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லும் லாரியின் பதிவெண் என்னவென்றால் நான் கவனிக்கவில்லை.

உங்கள் கணவர் வண்டியின் பதிவெண் என்னவென்றால் எனக்கு தெரியாது. புகாரில் உள்ள சங்கதிகள் போலிசார் சொல்லி தான் எழுதினீர்கள் என்றால் என் மாமனார் தான் புகார் கொடுத்தார், அதில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன். ஆத்துப்பட்டி பிரிவு அருகே நீங்கள் சொல்வது போல் விபத்து நடக்கவில்லை என்றும், அதற்கு 1km அருகில் உள்ள லியோனி தோட்டத்திற்கு அருகில் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. லாரி நின்றுகொண்டிருந்ததற்கு முறையாக ஒளிரும் விளக்குகள் உள்ள சமிக்கைகள் வைக்கப்பட்டிருந்தது என்றும், லாரியில் உள்ள விளக்குகள் எறிந்துகொண்டிருந்தது என்றும், உங்கள் கணவர் தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து வாகன விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து பற்றி உங்களக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியுள்ளது என்று உங்களக்கு தெரியாது என்றால் சரிதான்.

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், உங்கள் கணவர் தான் இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 81/2020**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | முத்துராமலிங்கம் | தொழில் | : | ஓய்வு, அரசு பணி |
| கிராமம் | : | பழைய செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 69 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பழைய செம்பட்டியில் குடியிந்துகொண்டு வருகிறேன். வாகன விபத்தில் இறந்த பாலசுப்பிரமணி எனது மகன், அ.சா.1 ஜோதிபகவதி எனது மருமகள். கடந்த 05.06.2020 அன்று இரவு 10.30 மணியைபோல என் மருமகள் போன் செய்தபோது அங்கிருந்த முருகேசன் என்பவர் போன் செய்து என் மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறிதன்பேரில் என் மருமகள் என்னிடம் கூறினார். சம்பவ இடமான ஆத்துப்பட்டி பிரிவுக்கு நானும், எனது மருமகளும், எனது உறவினர்களும் சென்று பார்த்தபோது என் மகனுக்கு நெற்றி, முகம், இடுப்பு ஆகிய இடங்களில் காயம் காணப்பட்டது. நாங்கள் அவரை சிகிக்சைக்காக திண்டுக்கல் மருத்துவனைக்குக்கும், அங்கிருந்து மேல்சிகிக்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் என் மகன் பாலசுப்பிரமணி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நாங்கள் செம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் மகன் எங்கு சென்று வரும்போது விபத்து ஏற்பட்டது என்றால் பால்பண்ணைக்கு பொலிரோ வாகனத்தை வாடகைக்கு விட்டுள்ளார். அது சம்மந்தமாக கேட்டுவிட்டு வரும்போது விபத்து நடந்துவிட்டது. உங்கள் மகன் இறப்பிற்கு இழப்பீடு பெற்றுவிட்டீர்களா என்றால் பெற்றுவிட்டோம். விபத்து சமயத்தில் லாரி சாலையின் கிழக்கு பகுதியில் நின்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி கொரோனா காலம் என்றால் சரிதான். கொரோனா காலத்தில் போக்குவரத்து அதிகம் இல்லை என்றும், ஒரு சில வாகனங்கள் தான் Epass அடிப்படையில் இயங்கி வந்தது என்றால் சரிதான். அதனால் ரோட்டில் போக்குவரத்து அவ்வளவாக இல்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள விபரம் அனைத்தும்

போலிசார் சொல்லி தான் சொன்னீர்கள் என்றால் சரிதான். லாரி நின்றுகொண்டிருந்ததற்கு முறையாக ஒளிரும் விளக்குகள் உள்ள சமிக்கைகள் வைக்கப்பட்டிருந்தது என்றும், லாரியில் உள்ள விளக்குகள் எறிந்துகொண்டிருந்தது என்றும், உங்கள் மகன் தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து வாகன விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து பற்றி உங்களக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், உங்கள் மகன் தான் இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor